# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE

## DEPOSITIONS OF WITNESSES
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
## DEPOSITIONS OF WITNESSES D.W.1

**OS.NO.113/2019**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.மோகனரங்கன் |
| Father/Husband Name | : | திரு.கோவிந்தசாமி |
| Age | : | 70 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.06.2026

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

விசாரணை தொடங்கிய நேரம் : 02.40 P.M

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி : (Page No.3)**

வாதி தாக்கல் செய்த வழக்கில் நான் மட்டுமே வழக்கறிஞர் வைத்து நடத்துகிறேன் என்றால், சரிதான். 2ம் பிரதிவாதி வழக்கறிஞர் வைக்கவில்லை. வக்காலத்தில் நான் மட்டுமே கையெழுத்துபோட்டு வழக்கறிஞரிடம் கொடுத்தேனா என்றால், ஆமாம். மணி கையெழுத்து போடவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் 2ம் பிரதிவாதிக்கும் சேர்த்து சாட்சியம்அளிப்பதாக குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான். அவ்வாறு நான் சொல்ல உரிமையில்லை என்றால், சரியல்ல. அவர் நிலத்தை நான் வாங்கியிருப்பதால் சொல்கிறேன். நான் வழக்கை பற்றி 2ம் பிரதிவாதியிடம் விவாதித்தேனா என்றால், 2019ல் விற்று போய்விட்டார். அவரை கேட்காமலேயே பிரமாணம் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல. அவரை கேட்டு தான் செய்தேன்.

வரைபடம் என் தரப்பில் Ex.B.1 ஆக குறியீடு செய்திருக்கிறேன் என்றால், ஆமாம். நான் சொன்னதை வைத்து வழக்கிறஞர் Ex.B1 வரைபடம் தயாரித்தாரா என்றால் ஆமாம், சுவாதினத்தில் அப்படி தான் இருக்கிறோம். சர்வே எண் 330 / 3B ல் வரைபடத்தில் கண்டவாறு அனுபவம் உள்ளதா என்றால், ஆமாம், 3 வீடுகள் அதில் உள்ளது. ஒரு கிணறு, பம்பு செட்டு உள்ளது. மணி வீட்டை வரைபடத்தில் காட்டவில்லை என்றால், சரியல்ல. காட்டியிருக்கிறேன். மணி, பழனி வீடு இரண்டும் ஒரே வீடு, ஆளுக்கு பாதி என் தகப்பனார் கட்டியது. மணி, பழனி வீடு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்று காண்பித்திருக்கிறேனா என்றால், சரியல்ல, சொல்லியிருக்கிறேன். நான் அரசு ஊழியர் என்றால், சரிதான். 2015 ல் forester ஆக இருந்து ஓய்வு பெற்றேன். தற்சமயம் ஓய்வூதியம் பெறுகிறேன் என்றால், ஆமாம். 2019 ல் நிலம் வாங்கியதாக சொல்கிறேன், ஓய்வு பெற்ற பிறகும் அரசு ஊழியர் என்பதால் அதன் விவரம் தெரிவிக்க வேண்டும் என்றால், சரியல்ல. நான் ஓய்வு பெற்று வந்த பண பயனை வைத்து வாங்கினேன்.

நான் தாக்கல் செய்த பதிலுரையில் இந்த பண்ணை வீட்டை பற்றி சொல்லவில்லை என்றால், சொல்லியிருக்கிறேன். அது என்தகப்பனார் கட்டியது. இந்த வழக்கு காலவரை தோஷத்தால் பாதிக்கப்பட்டதாக சொல்லியிருப்பது தவறு என்றால், சரியல்ல. 2019 ல் பழனி எந்த ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு எழுதி கொடுத்தார் என்றால், அவர் 20 ஆண்டுகளாக சுவாதினத்தில் இருந்தார். மேற்படி கிரைய ஆவணத்தில் சுவாதினத்தில் இருந்ததாக குறிப்பு எழுதவில்லை என்றால், சரியல்ல, உள்ளது. மின் இணைப்பு 3 பேருக்கு பாத்தியப்பட்ட இணைப்பு என்றால், சரிதான். நான்மறுக்கவில்லை. அதற்கு பதிலாக இன்னொரு மின் இணைப்பில் ஒரு நாள் கூடுதலாக தண்ணீர் வாதி இரைத்துக்கொள்கிறார். அதற்காக தான் அனுமதி கொடுத்திருக்கிறோம்.

நான் என்னுடைய பதிலுரையில் ஏற்கெனவே வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால், ஆமாம். பதிலுரையில் எந்த வருடம் பிரித்துக்கொண்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால், 1995 ல் என்தகப்பனார் வாய் மொழியாக பிரித்துக்கொடுத்தார். பழனி என்பவர் 1959 தான செட்டில்மெண்ட் பத்திரபடி சர்வே எண் 330/3B நிலத்தை மேற்படி பழனிக்கு ஊனமுற்றவர் என்பதால் என் தகப்பனார் வாய் மொழியாக கொடுத்தார் என்றால், சரியல்ல. வாதிக்கும் எனக்கும் 2ம் பிரதிவாதிக்கும் என் தகப்பனார் தலா 1 ஏக்கர் நிலத்தை பிரித்துக்கொடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு வீடு பிரித்து கொடுத்தார். கிணறு, பொதுவழி பிரித்து கொடுத்தார். பண்ணை வீடு கட்டியதாக சொல்வதற்கு கதவு எண் என் பெயரில் உள்ளது என்பதற்கு ஆவணம் ஒப்படைத்திருக்கிறேனா என்றால், மின் இணைப்பு உள்ளது. கதவு எண் நினைவில்லை. வாதி தாக்கல் செய்த வழக்கில் எனக்கு என்ன பரிகாரம் என்று நான் குறிப்பிட்டு பதில் உரையில் கேட்கவில்லை என்றும், பிரமாணத்தில் மட்டுமே கோரியிருப்பது தவறானது என்றால், சரியல்ல. வரைபடம் படி பிரித்துக்கொள்வதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லையா என்றால், இல்லை. Ex.B1 வரைபடத்தில் கண்ட விவரங்கள் படி சுவாதினத்தில் இருக்கிறேனா என்று சொல்கிறேனா என்றால், ஆமாம். வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து என்னை விசாரித்தார்கள் என்றால், ஆமாம். என் மகனை வினோத்குமார் என்பவர் காலை உடைத்துவிட்டார். காவல் துறை விசாரணைக்கு 2ம் பிரதிவாதி மணியும் வந்தார் என்றால், இல்லை. மணி போலீஸ் விசாரணையில் சொத்தை மட்டும் கொடுத்ததாகவும், மின் இணைப்பு மற்றும் கிணறு குறித்து எதுவும் கொடுக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார் என்றால், சரியல்ல. 2ம் பிரதிவாதியை நீதிமன்றத்தில் விசாரித்தால் உண்மை நிலை வெளியே வரும் என்றால், அவர் எனக்கு விற்று போய்விட்டார். மணிக்கு உரிமையில்லாத சொத்தையும் அனுபவமில்லாத சொத்தையும் எனக்கு விற்றதால், வாய்மொழி பாகம்யார் யாருக்கு எப்படி என்று அவரை விசாரித்தால் தான் தெரியவரும்

என்றால், சரியல்ல. 2019 ல் மணி கிரைய பத்திரம் எழுதி கொடுத்துவிட்டார்.

எங்களுக்கு பாத்தியப்பட்ட கிராமநத்தத்தில் வாதி வீடு கட்டியிருப்பதாக பதில் உரையில் நான் சொல்லியிருப்பது தவறு என்றால், சரியல்ல. நான் சொல்லியிருப்பது என் நிலத்தில் அவர் கட்டியிருக்கும் வீட்டை பற்றிதான். என் தகப்பனார் 1995 ல் இறந்துவிட்டார். தகப்பனார் இறப்புக்கு பிறகு மூன்று பேரும் அவரவர் சொத்தை தனியாக அனுபவித்து வருகிறோம் என்றால், ஆமாம். அதன் படி தான் வாதி சர்வே எண். 330/1B யில் அவர் இருக்கிறார் என்றால், சரியல்ல, 330/3B தான் சரியானது. மொத்த நிலம் 3 ஏக்கர் 40 செண்ட் ஆகும். ஒருவருக்கு மட்டும் எப்படி 1 ஏக்கர் 35 செண்ட் ஒதுக்க முடியும். அவர் ஊனமுற்றவர் என்பதால் பஞ்சாயத்து முன்பு கூடுதலாக நிலம் ஒதுக்கப்பட்டது என்றால், சரியல்ல. அது பொய். பண்ணை வீட்டின் மதிப்பை குறிப்பிடவில்லை என்றால், சரிதான். நீதிமன்றம் நீதிமன்ற கட்டணத்தை கட்ட சொன்னால் செலுத்த தயாராக இருக்கிறேன். இதை நான் பதிலுரையில் சொல்லவில்லை என்றால், சரியல்ல.

நான் தவறான விவரங்களை பதிலுரையிலும்பிரமாணத்திலும் சொல்லியிருப்பதால் வாதி கோரியபடி தாவா தீர்ப்பாணை செய்ய வேண்டும் என்றால், சரியல்ல. அவ்வாறு ஒதுக்கியிருந்தால் நான் 2000 ல் வீடு கட்ட அனுமதி அளித்திருக்க மாட்டார். மேலும் எனக்கு வழி இல்லை என்று மறுக்கிறார். டிராக்டர் போக வழி இல்லை. நான் பதிலுரையில் 2000 ம் வருடம் வீடு கட்டிவிட்டேன் என்ற விவரத்தை சொல்லியிருக்கிறேனா என்றால், நினைவில்லை. 2019 ல் கிரைய ஆவணத்தில் மணி தான் பண்ணை வீட்டை முழுமையாக கட்டிவிற்றதாக சொல்லியிருப்பது தவறா என்றால், ஆமாம். பண்ணை வீட்டை பெரியவர்கள் மணிக்கு தான் ஒதுக்கினார்கள். வாதிக்கு எனக்கு பக்கத்தில் காலி இடம் ஒதுக்கி கொடுத்தார்கள். மணி வீட்டில் வாதி வீடு

கட்டும் வரை இருக்கிறேன் என்று பாதி வீட்டில் அவருடனே இருந்தார். பிறகு மணி மகள் வீட்டிற்கு போய்விட்டார். பழனி முழு வீட்டையும் ஆக்கிரமித்துக்கொண்டார். இந்த விஷயத்தை இந்த பதிலுரையில் சொல்லியிருக்கிறேனா என்றால், இல்லை. தற்சமயம் சொல்வது ஏற்புடையது அல்ல என்றால், சரியல்ல. பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் : 03.10 P.M

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.